செய்தி வெளியீடு எண் :76 நாள் :27.09.2021

**தேனி மாவட்டம்**
**வனத்துறையின் சார்பில்**
**புலிகளுக்கான இந்தியா தொடர்பான வாகன விழிப்புணர்வு பேரணி மற்றும் புலிகள் பாதுகாப்பு உறுதிமொழி ஆகிய நிகழ்வுகள் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. க.வீ.முரளீதரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது:-**

******

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், வனத்துறையின் சார்பில் இந்திய நாட்டின் 75-வது சுதந்திர தினம் கொண்டாடுவதை சிறப்பிக்கும் விதமாக, புலிகளுக்கான இந்தியா தொடர்பான வாகன விழிப்புணர்வு பேரணியை இன்று (27.09.2021) மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. க.வீ.முரளீதரன், இ.ஆ.ப., அவர்கள் கொடியசைத்து, துவக்கி வைத்து, புலிகள் பாதுகாப்பு உறுதிமொழி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் ஏற்கப்பட்டது.

நமது நாடு சுதந்திமடைந்து 75 ஆண்டு கொண்டாடுவதை சிறப்பிக்கும் விதமாக இந்திய அரசு இந்த ஆண்டை புலிகளுக்கான ஆண்டாக அறிவித்து “Azadi ka Amrit Mahotsav” என்று பெயரிடப்பட்டுள்ளது. மேலும், நாட்டின் 51-வது புலிகள் காப்பமாக தேனி மாவட்டத்திலுள்ள மேகமலை வனப்பகுதியை உள்ளடக்கிய ஸ்ரீவில்லிபுத்தூர்-மேகமலை புலிகள் காப்பகம் அறிவிக்கப்பட்டுள்ளது. தேசிய புலிகள் பாதுகாப்பு குழுமத்தின் கொடி ஸ்ரீவில்லிபுத்தூர் மேகமலை புலிகள் காப்பகத்தின் மூலம் விருதுநகர் மாவட்டம், ராஜபாளையத்தில் பெறப்பட்டு, புலிகள் பாதுகாப்பு தொடர்பான நிகழ்ச்சிகள் மற்றும் வாகன பேரணி ஸ்ரீவில்லிபுத்தூர் மற்றும் அதன் சுற்றுப்பகுதிகளில் நடத்தப்பட்டு, பின்னர் அக்கொடி தேனி மாவட்டத்திற்கு வந்தடைந்தது.

இன்றைய தினம் தொடங்கி வைக்கப்பட்டுள்ள இவ்வாகனப் பேரணியில் தேனி மாவட்ட ஊர்க்காவல் படையிலிருந்து 150 நபர்கள், இராயப்பன்பட்டி எஸ்.யூ.எம் பள்ளி மற்றும கம்பம் முத்தையாபிள்ளை பள்ளி ஆகிய பள்ளிகளிலிருந்த 220 மாணவர்கள், கம்பம் ஆதிசுஞ்சனகிரி மகளிர் கல்லூரியிலிருந்து 65 மாணவியர்கள், சின்னமனூர் மலை இராணுவம் - காவல் பயிற்சிக் கல்லூரியிலிருந்து 120 மாணவர்கள், தேனி கம்மவார் கல்லூரியிலிருந்து 60 மாணவர்கள், ஸ்ரீவில்லிபுத்தூர் மேகமலை புலிகள் காப்பக வனப்பணியாளர்கள் மற்றும் தேனி வனக்கோட்ட வனப்பணியாளர்களுடன் தேனி, சின்னமனூர், உத்தமபாளையம், கம்பம், கூடலூர் வழியாக குமுளி சென்றடைந்து, பின்னர் தேசிய புலிகள் பாதுகாப்பு குழுமத்தின் கொடி பெரியார் புலிகள் காப்பகத்தினரிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

மேலும், இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் புலிகள் பாதுகாப்பு தொடர்பான உறுதிமொழி ஏற்கப்பட்டு, திருநெல்வேலி தனியார் தொண்டு நிறுவனத்தின் சார்பில் புலிகள் பாதுகாப்பது குறித்த கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது.

இந்நிகழ்வின் போது, ஸ்ரீவில்லிபுத்தூர் மேகமலை புலிகள் காப்பாக கள இயக்குநர் தீபக் எஸ்.பில்ஜி, இ.வ.ப., மேகமலை மண்டல துணை இயக்குநர் எஸ்.ஆனந்த், இ.வ.ப., ஸ்ரீவில்லிபுத்தூர் மண்டல துணை இயக்குநர் மரு.ஹெச்.திலீப்குமார், இ.வ.ப., தேனி மாவட்ட வன அலுவலர் திருமதி சி.வித்யா, இ.வ.ப., உதவி வனப்பாதுகாவலர்கள், வனச்சரக அலுவலர்கள், இதர வனம் மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**